பாடம் - 2

الدرس الثاني

## யானை வரலாறு

## قصة الفيل

அபீஸீனிய நாட்டு மன்னர் நஜ்ஜாஷியின் பிரதிநிதியாக யமனில் ஆட்சி செய்த அப்ரஹா என்பவன், அரேபியர்கள் மக்காவிலுள்ள கஅபத்துல்லாஹ்வை ஹஜ் செய்வதையும் அதனை அவர்கள் புனிதப்படுத்துவதையும், மிகவும் தூரமான பகுதிகளிலிருந்தெல்லாம் அங்கு வருவதையும் கண்டபோது ஸன்ஆ என்ற ஊரில் பெரிய சர்ச் ஒன்றைக் கட்டினான். ஹஜ்ஜுக்குச் செல்லும் அரபியரை அதன் பால் திருப்பிவிட வேண்டும் என்பதற்காக. இதைக் கேள்வியுற்றதும் அரபுக்குலங்களில் ஒன்றான பனூ கினானாவைச் சேர்ந்த ஒருவன் இரவில் அந்த சர்ச்சினுள் நுழைந்து அதன் சுவர்களில் மலத்தைத் தேய்த்து விட்டான். இதைக் கேள்வியுற்றதும் அப்ரஹா கொதித் தெழுந்தான். ஆறாயிரம் போர் வீரர்கள் கொண்ட மிகப்பெரும் படையைத் தயார்படுத்தினான். அப்படையில் ஒன்பது யானைகள் இருந்தன. அவற்றில் மிகப்பெரிய யானையைத் தனக்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு கஅபதுல்லாஹ்வை இடிப்பதற்காக அப்படையுடன் புறப்பட்டான்.

மக்காவுக்கு அருகே வந்தடைந்ததும் தன் படையைத் தயார்படுத்தி மக்காவிற்குள் நுழைய ஆயத்தமானான். எனினும் அவன் யானை மக்காவை நோக்கிச் செல்லாமல் படுத்துவிட்டது. அவர்கள் யானையை வேறு திசைகளின் பக்கம் திருப்பினால் எழுந்து ஓட ஆரம்பிக்கின்றது. மக்காவை நோக்கித் திருப்பினால் படுத்துக்கொள்கின்றது. இந்நிலையில் அவர்கள் மீது ‘அபாபீல்’ பறவைக் கூட்டங்களை அல்லாஹ் அனுப்பிவைத்தான். அவை நரக நெருப்பில் சூடேற்றப் பட்ட சிறு சிறு கற்களை அவர்கள் மீது எறிந்தன. ஒவ்வொரு பறவையும் கொண்டைக் கடலை அளவிலான மூன்று கற்களைச் சுமந்து வந்தது. ஒன்று அவற்றின் அலகிலும் மற்ற இரண்டு இரு கால்களிலும் இருந்தன. அக்கற்கள் ஒருவன் மீது விழுந்து விட்டால் அவனுடைய உறுப்புகள் துண்டு துண்டாகி சிதைந்து அவன் அழிந்தேபோவான். அவர்கள் பயந்து ஓடும்போது வழியிலேயே விழுந்து அழிந்தனர்.

அப்ராஹாவின் கதி என்னவெனில், அல்லாஹ் அவன் மீது ஒரு நோயை அனுப்பினான். அதன் காரணமாக அவனது விரல்கள் அழுகி விழுந்தன. ஸன்ஆவை அடைவதற்குள் அந்நோய் அவன் உடல் முழுதும் பரவி அங்கேயே செத்துமடிந்தான். குறைஷிகளோ அப்படையைக் கண்டு தம் உயிர்களுக்கு அஞ்சி பள்ளத்தாக்குகளில் சிதறிச்சென்று மலைகளில் ஏறி தம்மைக் காத்துக்கொண்டனர். பிறகு யானைப் படையினருக்கு நேரவேண்டியது நேர்ந்தபிறகு குறைஷிகள் அச்சமற்றவர்களாக வீடு திரும்பினர். இந்நிகழ்ச்சி நபிகள் நாயகம் பிறப்பதற்கு ஐம்பது நாட்களுக்கு முன்பு நடைபெற்றது.

**நபிகள் நாயகத்துக்குப் பாலூட்டுதல் -** நபிகள் நாயகம் பிறந்தபோது அவரது பெரிய தந்தை அபூலஹபுடைய அடிமைப் பெண் ஸுவைபா என்பவள் நபிகளாருக்குப் பாலூட்டினாள். அதற்கு முன் நபிகள் நாயகத்தின் சிறிய தந்தை-அப்துல் முத்தலிபுடைய மகன் ஹம்ஸாவுக்கும் பாலூட்டி இருந்தாள். இதனால் ஹம்ஸா நபிகள் நாயகத்துக்குப் பால்குடி சகோதரர் ஆவார். அரபியர்களிடம் ஒரு வழக்கம் இருந்தது. ஆரோக்கியமான உடல் வளர்ச்சிக்குரிய காரணிகள் தங்கள் குழந்தைகளுக்கு முழுமையாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் தங்களின் குழந்தைகளுக்குப் பாலூட்டி வளர்க்கும்படி கிராமவாசிகளிடம் அனுப்பி வைப்பார்கள். அந்த அடிப்படையில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வேறொரு செவிலித்தாயிடம் ஒப்படைக்கப்பட்டார்கள். எவ்வாறெனில் நபிகள் நாயகம் பிறந்த சமயம் பனூஸஃத் கோத்திரத்தைச் சேர்ந்த கிராமத்துப் பெண்களின் ஒரு பிரிவினர் பாலூட்டி வளர்ப்பதற்காக குழந்தைகளைத் தேடி மக்காவுக்கு வந்தனர். அப்பெண்கள் வீடுவீடாகச் சுற்றித்திரிந்தனர். அவர்கள் அனைவருமே நபிகள் நாயகம்(ஸல்)அவர்களைப் புறக்கணித்தனர். காரணம் நபியவர்கள் அநாதையாகவும் ஏழையாகவும் இருந்ததே!

நபிகள் நாயகத்தைப் புறக்கணித்த அத்தகைய பெண்களில் ஹலீமத்துஸ் ஸஃதிய்யா என்ற பெண்ணும் ஒருவராக இருந்தார். எனினும் அதிகமான வீடுகளை அவர் சுற்றியலைந்தும் வசதியான குடும்பத்தைச் சேர்ந்த ஒரு குழந்தை அருக்குக் கிடைக்கவில்லை. அப்படியொரு குழந்தை கிடைத்தால் தன்னுடன் எடுத்துச் சென்று அந்த வகையில் கிடைக்கும் கூலியைக் கொண்டு வாழ்க்கையில் குறிப்பாக அந்த பஞ்ச ஆண்டில், தன்னை எதிர்கொள்ளும் கஷ்டத்தையும் வறுமையையும் சமாளித்துக் கொள்வார். எனவே ஹலீமா அநாதைக் குழந்தையையும் அற்பக்கூலியையும் பொருந்திக் கொண்டு ஆமீனாவின் வீட்டிற்குத் திரும்பி வந்தார்.

மெலிந்த, மெதுவாகச் செல்லக்கூடிய பெண் கழுதையில் பயணமாகி ஹலீமா தன் கணவருடன் மக்காவுக்கு வந்திருந்தார். திரும்பிச் செல்லும் வழியில் ஹலீமா நபிகள் நாயகம்(ஸல்)அவர்களை தன் மடியில் வைத்திருக்கும்போது அக்கழுதை வேகமாக ஓட ஆரம்பித்தது. எல்லா வாகனங்களையும் பின்னால் தள்ளிவிட்டது. வழியில் செல்லும் பயணக் கூட்டத்தினர் மிகவும் ஆச்சரியப்படலானார்கள்.

மேலும் ஹலீமா கூறியதாவது: ‘அவரது மார்பகத்தில் கொஞ்சம்கூட பால் சுரக்காமல் பால் குடிக்கும் அவரது குழந்தை கடுமையான பசியின் காரணமாக எப்போதும் அழுதுகொண்டிருக்கும். ஆயினும் நபிகள் நாயகம்(ஸல்)அவர்களுக்கு அவர் பாலூட்டியபோது அவரது மார்பில் அதிகம் பால் சுரந்தது.’ மேலும் ஸஃது கிளையாரின் பகுதியிலிருந்த வறண்டு போயிருந்த தனது பூமியைப் பற்றியும் கூறினார்: ‘இக்குழந்தைக்குப் பாலூட்டும் பாக்கியம் பெற்றதும் அவருடைய பூமியும் கால்நடைகளும் பலன் தந்தன. அவரது நிலையே முற்றிலும் மாறியது. அவரது கஷ்டமும் வறுமையும் மாறி மகிழ்ச்சியும் செழிப்பும் மலர்ந்தது.’

நபிகள் நாயகம் (ஸல்) ஹலீமாவின் பராமரிப்பில் இரண்டாண்டுகளைக் கழித்தார்கள். அவர்களின் மீது ஹலீமா முழுமையான ஆர்வம் கொண்டிருந்தார். இக்குழந்தையைச் சூழ்ந்திருக்கக்கூடிய வழக்கத்திற்கு மாற்றமான விஷயங்களையும் நிலைமைகளையும் நன்கு உணர்ந்திருந்தார். இந்த இரு ஆண்டாண்டு களுக்குப் பிறகு குழந்தையை மக்காவில் இருந்த அவரது தாய், பாட்டனாரிடத்தில் கொண்டு வந்தார். எனினும் அக்குழந்தையின் பரகத்தால் தனது நிலையில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்ட ஹலீமாஇரண்டாம் முறையும் அக்குழந்தையை தன்னுடன் வைத்துக்கொள்ள இணங்குமாறு ஆமினாவை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். ஆமினாவும் சம்மதிக்கவே ஹலீமா அநாதைக் குழந்தையுடன் ஸஃது கிளையாரிடம் மீண்டும் திரும்பி வந்தார். மகிழ்ச்சி அவரைச் சூழ்ந்து கொண்டது. பாக்கியம் அவரை வளைத்துக் கொண்டது.